செ.வெ.எண்:37 நாள்:17.08.2017

# தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு SDAT ஊக்க உதவித் தொகை திட்டம் 2017-2018

2017- 2018 ஆம் கல்வி ஆண்டில் தமிழகத்தில் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி/ பல்கலைக் கழகத்தில் பயிலும் தலைசிறந்த விளையாட்டு வீரர்/வீராங்களுக்கு வழங்கப்படும் **SDAT** ஊக்க உதவித் தொகை திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டன் கீழ் ஆண்டொன்றக்கு உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ரூ.10000/—ம் மற்றும் கல்லூரி/ பல்கலைக் கழக மாணவர்களுக்கு ரூ. 13,000/- ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

மேற்கண்ட விண்ணப்பங்கள் பெறுவதற்கு 01.07.2016 முதல் 30.06.2017 முடியவுள்ள காலக் கட்டத்தில் தேசிய அளவில் விளையாட்டில் பதக்கங்கள் பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். குழு போட்டிகளாயின் முதல் இரண்டு இடங்களையும், தனிநபர் போட்டிகளாயின் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். தேசிய அளவிலான போட்டிகள் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு சம்மேளங்கள், இந்திய பள்ளி விளையாட்டுக்கள் கூட்டமைப்பு, இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்/ மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மற்றும் அகில இந்திய பல்கலைக் கழகங்களின் சங்கம் ஆகியவற்றினால் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலங்களில் ரூ.10/- மட்டும் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணைய தளமான www.sdat.tn.gov.in - லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கரூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அலுவலகம், மாலநாயக்கன்பட்டி கிராமம், நீதிமன்றம் பின்புறம், தான்தோன்றிமலை 639005. என்ற முகவரியில் 28.08.2017- க்குள் ஒப்படைக்குமாறும், மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண்.9942754053 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர்.